**சமூகப் பாதுகாப்பு செயற்றிட்டம்** ***(SOCIAL PROTECTION PROJECT) (P178973)***

**நிறைவேற்றுச் சுருக்கம் - பங்குதாரரர் ஈடுபாட்டுத் திட்டம்**

**செயற்றிட்டத்தின் பின்னணி** ***(STAKEHOLDER ENGAGEMENT PLAN):***

இலங்கையின் நீண்டகால கட்டமைப்பு சார்ந்த பலவீனங்களானது, பல்வேறு புற அதிர்ச்சிகள் மற்றும் *2019* ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட தவறான வரி குறைப்புகளால் மேலும் அதிகரித்து, நாட்டை கடுமையான பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளியது. இது வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீது பெரும் கஷ்டங்களை ஏற்படுத்தியதுடன், தாங்குதிறனைப் பலவீனப்படுத்தி மனித மூலதன சீரழிவுக்கு வழிவகுத்தது. *2018* ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் நெருக்கடி, *2019* உயிர்த்த ஞாயிறு குண்டுவெடிப்பு, அதைத் தொடர்ந்து *2020* இல் கோவிட்-*19* தொற்றுநோய் நிலைமைகளுக்கு மத்தியில் *3.5* சதவீத பொருளாதார முடக்கம் மற்றும் அதே ஆண்டு கடன் தரவரிசைப்படுத்தல் தரக்குறைப்புகளைத் தொடர்ந்து ஏற்பட்ட சர்வதேச நிதிச் சந்தைகளுக்கான வாய்ப்புகளை இழந்தமை போன்றவற்றினால் இந்த நெருக்கடி மேலும் மோசமடைந்த காரணத்தினால், *2022* ஏப்ரலில் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் *(IMF)* ஆதரவைக் கோரும் வெளிநாட்டுக் கடன் இடைநிறுத்தத்தை அறிவிக்க வழிவகுத்தது. *2022* ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இலங்கை அதிகாரிகளுக்கும் இடையே *2.9* பில்லியன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான *48* மாத விரிவாக்கப்பட்ட நிதி வசதி *(Extended Fund Facility-EFF)* திட்டம் குறித்து அதிகாரிகள் மட்டத்திலான இணக்கப்பாடு எட்டப்பட்டது. இந்த நெருக்கடியின் மத்தியில், ஏலவே இருந்த ஏற்றத்தாழ்வுகள் வேகமாக விரிவடைந்து, *2021* மற்றும் *2022* க்கு இடையில், அதிகளவிலான பாதிக்கப்படக்கூடிய மக்கள் வறுமையில் வீழ்ந்து, வறுமை விகிதம் *13.1* முதல் *25.6* சதவிகிதம் வரை இருமடங்காக அதிகரித்தது.

இலங்கையின் சமூகப் பாதுகாப்பு முறைமை விரிவானது ஆயினும், சிதறுண்டதாக உள்ளதுடன், பணப் பரிமாற்றங்கள், நுண்நிதி மற்றும் பல்வேறு சமூக மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளை வழங்கும் அரசாங்கத்தின் பிரதான சமூக உதவித் திட்டமான சமுர்த்தியையும் உள்ளடக்கியது. மேலும், *70* வயதுக்கு மேற்பட்ட குறைந்த வருமானம் கொண்ட தனிநபர்கள் (முதியோர் நன்மை அல்லது *Elderly Benefit),* மாற்றுத்திறனாளிகள் (மாற்றுத்திறனாளி நன்மை அல்லது *Disability Benefit)* மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்கள் *(Chronic Kidney Disease of Unknown Cause)* ஆகிய மூன்று முக்கிய வகைப்பட்ட பணக் கொடுப்பனவுத் திட்டங்கள் *(Cash Trnsfer)* உள்ளன. சிறிய ஒருங்கிணைப்புடன் தனித்தனியாக செயற்படும் இந்த பணக் கொடுப்பனவுத் திட்டங்கள் பல விநியோக செயற்பாடுகளில் (பயனாளிகளைத் தெரிவுசெய்தல், பதிவுசெய்தல், கொடுப்பனவுகள், குறைகளை முறையிடல்) குறிப்பிடத்தக்க

பிரதியாக்கங்களுக்கு *(Duplication)* வழிவகுப்பதுடன், இது ஒட்டுமொத்த செயற்பாட்டு செலவுகளிலும் திறனின்மை, பலவீனமான சுயாதீன மேற்பார்வை மற்றும் பொறுப்புக்கூறலுக்கு காரணமாக அமைகிறது. சமுர்த்தி திட்டமானது *2019* ஆம் ஆண்டில் பணப் பரிமாற்றத் திட்டகளைப் பெற்ற மிகவும் குறைந்த வருமானம் பெறும் நிலையில் உள்ளவர்களில் *48* சதவீதத்தினருக்கு மட்டுமே பயனளிக்கின்ற அதேநேரம், குறித்த அதே ஆண்டு மிகக் கூடிய வருமானம் பெறுகின்ற நிலையில் உள்ளவர்களில் சுமார் *12* சதவீதத்தினர் பணக் கொடுப்பனவுத் திட்டங்களைப் பெற்றனர் *(*உலக வங்கி *2022).*

சர்வதேச நாணய நிதியத்தின் *(IMF)* விரிவாக்கப்பட்ட நிதி வசதி *(EFF)*[1] மற்றும் உலக வங்கியின் தாங்குதிறன், நிலைத்தன்மை மற்றும் பொருளாதார மாற்றம் *Resilience, Stability and Economic Transformation (RESET))* அபிவிருத்தி கொள்கை செயற்பாடு *(DPO)*[2] ஆகியவை நாட்டின் பணக் கொடுப்பனவுத் திட்டங்களின் முக்கிய கொள்கை மட்டத்திலான கட்டுப்பாடுகளை நீக்க முயல்வதுடன், வெளிப்படையான, நன்கு இலக்குமையப்பட்ட, பயனுறுதிவாய்ந்த மற்றும் தாங்கு திறன்கொண்ட ஒரு புதிய சமூகப் பாதுகாப்பு முறைமையை நிறுவ உதவுகின்றன. கொள்கைச் சீர்திருத்தங்கள் செயல்படுத்தப்பட்டு வரும்[3] சமூகப் பதிவேடு, வலுவான தகுதி அளவுகோல்கள்[4] மற்றும் இலக்கு பணக் கொடுப்பனவுத் திட்டங்களை[5] வழங்குவதற்கான டிஜிட்டல் கட்டணங்கள் என்பவற்றில் தங்கியிருக்கும் ஒரு புதிய சமூகப் பாதுகாப்பு முறைமையை நிறுவுவதற்கான உதவியை உள்ளடக்கியுள்ளது. மேலும், *2022* ஜூலை மாதம் செயற்பாட்டுக்கு வந்த நலன்புரி நன்மைகள் சபையானது[6] *(WBB),* நலன்புரி விண்ணப்பதாரர்கள் மற்றும் பணக் கொடுப்பனவுத் திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் நடைமுறைப்படுத்தல் தொடர்பான தரவுகளின் முகாமைத்துவத்தை ஒருங்கிணைக்கும் ஆணை வழங்கப்பட்டுள்ளதுடன் மேற்படி முயற்சிகளில் முன்னணி வகிக்கிறது. இந்த புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டமானது *(Social Protection Project),* தாங்குதிறன், நிலைத்தன்மை மற்றும் பொருளாதார

---

1 2023 மார்ச் 21ஆந் திகதி EFF அங்கீகரிக்கப்பட்டது.

2 RESET 2023 ஜூன் மாதம் உலக வங்கியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

3 3.7 மில்லியனுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் சமூகப் பதிவேட்டில் பதிவு செய்துள்ளன, மேலும் பதிவுத் தரவைச் சரிபார்த்து, பணப் பயன்களைப் பெறுவதற்கான தகுதியைத் தீர்மானிக்க, உள்ளூர் அதிகாரிகளால் அவர்களது வீடுகளில் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது..

4 2023 பெப்ரவரி 9ஆந் திகதி பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட "கொடுப்பனவுகளைப் பெறத் தகுதியான நபர்களைத் தெரிவுசெய்தல்" என்ற விதிமுறைகளில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த விதிமுறைகள் EFF மற்றும் RESET DPO ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ள இரண்டு கொள்கை சீர்திருத்தங்களில் ஒன்றாகும்.

5 இந்த கொள்கை சீர்திருத்தங்கள் அடிப்படையில் சமுர்த்தி பணப் பரிமாற்றங்களை வழங்குவதில் சமுர்த்தி வகிக்கும் பங்கின் முக்கியத்துவத்தை குறைக்கும் அதே வேளையில், உதாரணமாக வாழ்வாதாரங்கள்/பொருளாதார உள்ளடக்க சேவைகள் உட்பட, திட்ட பயனாளிகளுக்கு பணமில்லா ஆதரவை வழங்குவதற்கு சமுர்த்தி தொடர்ந்து பொறுப்பேற்க வேண்டும்.

6 2002 ஆம் ஆண்டின் நலன்புரி பயன்கள் சட்டத்தின் ஊடாக நலன்புரிப் பயன்கள் சபை நிறுவப்பட்டது.

மாற்றம் *(RESET)* அபிவிருத்தி கொள்கை செயற்பாட்டின் கீழ் சமூகப் பாதுகாப்பில் முக்கிய சீர்திருத்தங்களுக்கு உலக வங்கியின் உதவியை பூர்த்தி செய்கிறது.

**செயற்றிட்டத்தின் நோக்கம் மற்றும் கூறுகள்:**

உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டமானது *(SPP)* வருமான உதவி மற்றும் வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வறிய மற்றும் மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீதான பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை குறைக்க முயலுகின்ற அதே நேரத்தில், நாட்டின் சமூகப் பாதுகாப்பு முறைமையின் வலிமை மற்றும் இணக்கத்தன்மையை வலுப்படுத்துகிறது. இத்திட்டம் பின்வரும் மூன்று கூறுகளை உள்ளடக்கியது

- **கூறு *1* – பணப் பரிமாற்றங்கள்** - புதிதாக நிறுவப்பட்ட சமூகப் பதிவேட்டைப் பயன்படுத்தியும் புதிய நலன்புரிப் பயன் கொடுப்பனவுத் திட்டத்தின் அடிப்படையிலும் பணப் பரிமாற்றத் *(CT)* திட்டங்கள் மூலம் வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கு இலக்குமயப்பட்ட வருமான உதவிக்கு நிதியளிக்கும்.
- **கூறு *2* – வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதற்கான முன்னோடி** - தெரிவுசெய்யப்பட்ட புவியியல் பிரதேசங்கள் மற்றும் துறைகளில் தெரிவுசெய்யப்பட்ட வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கான சிறிய அளவிலான பொருளாதார உள்ளீர்ப்புத் திட்டத்திற்கு நிதியளிப்பதன் மூலம் பணக் கொடுப்பனவுத் திட்டங்களை பூரணப்படுத்தும்.
- **கூறு *3* –திட்ட முகாமைத்துவம் மற்றும் சமூக பாதுகாப்பு முறைமைகளை வலுப்படுத்துதல்** - திட்டத்தை நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்களின் முகாமைத்துவத் திறனையும் அதிக தேவையுடையவர்களுக்கு பணக் கொடுப்பனவுத் திட்டங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை வினைத்திறனாக வழங்குவதற்கான பொறுப்புக்கூறல் பொறிமுறைகளையும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு நிதியளிக்கும்.

**மொத்த பயனாளிகள்:**

**நேரடிப் பயனாளிகளின் எண்ணிக்கை *2* மில்லியன் குடும்பங்கள் *(7.4* மில்லியன் பயனாளிகள்*)* என மதிப்பிடப்பட்டுள்ளது, *3.35* மில்லியனுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இற்றைப்படுத்தப்பட்ட சமூகப் பதிவேட்டில் *(Updated Social Registry)* உள்ளடக்கப்பட்டுள்ளன.** *2* மில்லியன் நேரடி குடும்பங்கள் *WBPS* மூலம் வழங்கப்படும் பணக் கொடுப்பனவுத் திட்டங்களால் பயனடையும் அதே நேரத்தில், திட்டத்தின் ஒரு பகுதியாகவன்றி சமூகப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டவர்கள் சமூகப் பதிவேட்டை இலக்கு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தும் எதிர்கால அரசாங்கத்

திட்டங்களிலிருந்தும் அவர்கள் வறுமையில் விழும் பட்சத்தில் பணக் கொடுப்பனவுத் திட்டங்களில் இருந்தும் பயனடையலாம். இத்திட்டமானது இந்த வகைப்பட்ட குழுக்களுக்கு பணக் கொடுப்பனவுகளை வழங்குவதன் மூலம் வறிய மற்றும் பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள், மற்றும் முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோயாளிகளுக்கு பயனளிக்கும். இந்த பணக் கொடுப்பனவுகளை அதிக எண்ணிக்கையிலான *(20* சதவீதம்*)* பெண் தலைமைத்துவக் குடும்பங்களை அவர்களின் பாதிப்புத் தன்மையின் அதிகரிப்பின் காரணமாக உள்ளடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. **பொருளாதார உள்ளீர்ப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில், கூறு *2* இன் கீழ் மொத்தம் சுமார் *5,800* பயனாளிகள் உதவியைப் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.** பெண்கள், குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், அவர்களின் அதிக பாதிப்புகள் காரணமாக முக்கிய இலக்கு மக்கள்தொகையாக இருக்கும். இந்தக் கூறு மாற்றுத்திறனாளிகளைச் உள்ளீர்ப்பதற்காக பொருத்தமான நடவடிக்கைகளையும் முன்னெடுத்துச் செல்லும்.

## நிறுவன ரீதியான ஏற்பாடுகள்

இத்திட்டமானது இரண்டு நடைமுறைப்படுத்தும் முகவர் நிறுவனங்களை *(Implementing Agencies)* கொண்டுள்ளது – நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு. பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் நிதி அமைச்சு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் நலன்புரி நன்மைகள் சபையில் திட்ட முகாமைத்துவ குழுக்கள் *(Project Movementt Teams)* அடையாளம் காணப்பட்டு நிறுவப்படும். நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் உள்ள நலன்புரி நன்மைகள் சபையின் செயற்திட்ட முகாமைத்துவ குழுவானது கூறு *1* – பணக் கொடுப்பனவுகளுக்கான நாளாந்த செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்யும், மேலும் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் முகாமைத்துவ குழுவானது கூறு *2,* உற்பத்தித் திறன்வாய்ந்த உள்ளீர்ப்புத் திட்டங்களுக்கான நாளாந்த செயற்பாடுகளை முகாமைத்துவம் செய்யும். கூறு *3* இன் கீழ், துணை-கூறு *3.1* நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் மற்றும் துணை கூறு *3.2* பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

## சுற்றாடல் மற்றும் சமூக அபாயங்கள்

திட்டத்தின் கீழ் சுற்றாடல் அபாயங்கள் 'குறைந்தவை' என்று கருதப்படுகிறது. இருப்பினும், சமூக அபாயங்கள் "கணிசமானவை" என மதிப்பிடப்படுகின்றன. முக்கிய

சாத்தியமான சமூக அபாயங்களில் பின்வருவன அடங்கும்: *(i)* இலக்குடன் இணைக்கப்பட்ட தவறுகள் காரணமாக தகுதியான பயனாளிகளை விலக்குதல், சமர்ப்பிக்கப்பட்ட தரவுகளில் உள்ள தவறுகள், சரிபார்ப்பின் போது கண்டறியப்படாத பிழைகள் மற்றும் தகவல்களை அணுகுவதற்கும் சமர்ப்பிப்பதற்கும் வங்கிக் கணக்குகளைத் திறக்க/செயற்படுத்த மற்றும் பணத்தை எடுக்கவும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் எதிர்கொள்ளும் சவால்கள், *(ii)* செயன்முறைகளில் புரிதல் மற்றும் வெளிப்படைத்தன்மை இல்லாமை, தரவுப் பாதுகாப்பு, ஆலோசனைகள் மற்றும் முறையீடுகள்/குறைகளுக்குப் பதிலளிப்பதற்கான பொறிமுறைகள் மற்றும் இழப்புடன் தொடர்பிலான அதிகாரம் மற்றும் செல்வாக்குடன் தொடர்புடைய உள்ளூர் அளவிலான அதிகாரிகளின் எதிர்ப்பு ஆகியவற்றால் திட்டத்துடன் தொடர்புபடாத பயனாளிகள் மற்றும் பிற ஆர்வமுள்ள குழுக்களால் உருவாக்கப்படும் சாத்தியமான சமூக அமைதியின்மை *(iii)* சமூக அபாயங்களைக் குறைப்பதற்கான முகாமைத்துவ குழுக்களின் வரையறுக்கப்பட்ட திறன், குறிப்பாக பங்குதாரர்/குடிமக்கள் ஈடுபாடு *(CE/SE)* செயன்முறை மற்றும் மேன்முறையீடுகள்/குறைகளுக்குப் பதிலளித்தல்; மற்றும் *(iv)* பயனாளிகளுடன் ஈடுபடும் அதிகாரிகளால் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அபாயம் மற்றும் பணப் பரிமாற்றங்களைச் செலவழிப்பதில் குடும்ப முடிவு எடுப்பதுடன் தொடர்புடைய குடும்ப வன்முறை காரணமாக மிதமான ஆனால் சாத்தியமான பாலியல் முறைகேடு மற்றும் துஷ்பிரயோகம்/பாலியல் துன்புறுத்தல் சம்பவங்கள்.

இந்த அபாயங்களைக் குறைக்க, இந்தத் திட்டம் புதிதாக நிறுவப்பட்ட சமூகப் பதிவேட்டில் சேர்க்கப்பட்டுள்ள, அவர்களின் அடையாளம் மற்றும் தகுதி வெளிப்படைத் தன்மையுடன் சரிபார்க்கப்பட்ட, பயனாளிகளுக்கு பணக் கொடுப்பனவை வழங்கும். மேலும், முழுமையான பொறுப்புக்கூறலையும் இலகுவான அணுகலையும் உறுதிசெய்ய, பயனாளிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு இலத்திரனியல் பரிமாற்றம் மூலம் பயன்கள் வழங்கப்படும். மேலும், இந்த திட்டம் பணப் கொடுப்பனவு பற்றிய தொடர்பாடல்களின் விரிவான பிரச்சாரத்திற்கு நிதியளிப்பதுடன், முறையீடுகள் மற்றும் குறைகளுக்கு சரியான நேரத்தில் பதிலளிக்கும் ஒரு செயற்பாட்டு பொறிமுறையையும் கொண்டுள்ளது. பாலியல் முறைகேடு மற்றும் துஷ்பிரயோகம்/பாலியல் துன்புறுத்தல் ஆகியவற்றிற்கான பூஜ்ஜிய சகிப்புத்தன்மையை தெளிவாகக் குறிப்பிடும் ஒரு நடத்தைசார்ந்த தரநியமம் பின்பற்றப்பட்டு, திட்டத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் தெரிவிக்கப்படுவதுடன், பாலியல் முறைகேடு மற்றும் துஷ்பிரயோகம்/பாலியல் துன்புறுத்தல் *(SEA/SH)* தொடர்பான சம்பவங்களை தகுதிவாய்ந்த சேவை வழங்குநர்கள் மூலம் அந்தரங்கமான முறையில் முறையிடுவதற்கும் பதிலளிப்பதற்கும் ஒரு பொறிமுறை இருக்கும்.

**பங்குதாரர் ஈடுபாட்டிற்கான உலக வங்கியின் தேவைப்பாடுகள்**

சமூகப் பாதுகாப்புத் திட்டமானது "பங்குதாரர்களின் ஈடுபாடு மற்றும் தகவல் வெளிப்படுத்தல்" என்ற சூழல் மற்றும் சமூக தரநிலை *10* இன் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருப்பதால், இந்த பங்குதாரர் ஈடுபாடு திட்டத்தின் *(Stakeholder Engagement Plan)* ஒட்டுமொத்த நோக்கம் திட்ட காலம் முழுவதும் பொதுத் தகவல் வெளிப்படுத்தல் மற்றும் ஆலோசனை உள்ளடங்கலாக பங்குதாரர் ஈடுபாட்டிற்கான முறையானதொரு அணுகுமுறையை நிறுவுதல், பங்குதாரர்களுடன் ஆக்கபூர்வமான உறவைப் பேணுதல், பங்குதாரர்களின் கருத்துக்களைக் கவனத்திற் கொள்ளுதல், திட்டத்தால் பாதிக்கப்பட்ட தரப்பினருடன் பயனுள்ள மற்றும் உள்ளடக்கிய ஈடுபாட்டிற்கான வழிகளை ஊக்குவித்தல் மற்றும் வழங்குதலாகும். பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டமானது திட்டக் குழு பங்குதாரர்களுடன் தொடர்பு கொள்ளும் வழிகளை கோடிட்டுக் காட்டுவதுடன், திட்டம் மற்றும் திட்டத்துடன் தொடர்புடைய எந்தவொரு செயற்பாடுகளையும் பற்றிய மக்கள் கரிசனைகளை வெளிப்படுத்துவதற்கும் கருத்துகளை வழங்குவதற்கும் அல்லது முறையீடுகளை செய்வதற்குமான ஒரு பொறிமுறையையும் உள்ளடக்கியது. பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டமானது நடத்தப்பட்ட ஆலோசனைகளின் சுருக்கங்களையும் உள்ளடக்கியதாகும். பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டமானது பொது மீளாய்வு மற்றும் கருத்துக்களுக்காக அமைச்சின் இணையதளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டமானது ஒரு உயிர்ப்பான ஆவணம் என்பதோடு, திட்ட காலம் முழுவதும் இற்றைப்படுத்தப்படும். குறிப்பிடத்தக்க மாற்றங்கள் செய்யப்பட்டால், கடன் பெற்றவர் இற்றைப்படுத்தப்பட்ட *(Updated)* பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டத்தை வெளிப்படுத்துவார்.

**செயற் திட்டத்தை தயாரிப்பதற்கான சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் செயற் திட்ட *(SSNP)* அனுபவம் மற்றும் ஆலோசனைகள்**

இந்த புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டமானது சமூகப் பதிவுத் தகவல் முறைமையை உருவாக்க நலன்புரி நன்மைகள் சபையை நிறுவுவதற்கு உதவிய உலக வங்கியால் நிதியளிக்கப்பட்ட சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் திட்டத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. நலன்புரி நன்மைகள் சபையானது புதிய சமூகப் பதிவுத் தகவல் முறைமையை ஒழுங்குபடுத்தி பேணுவதுடன், பயனாளிகளைத் தெரிவுசெய்கிறது. சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் திட்டத்தின் கீழ், ஒரு தொடர்பு உத்தி மற்றும் குறை தீர்க்கும் பொறிமுறை *(GRM)* வழிகாட்டுதல் உருவாக்கப்பட்டது. குறை தீர்க்கும் பொறிமுறை தொகுதி முழுமையாக செயற்படவில்லை என்றாலும், அது உருவாக்கப்பட்டு வரும் ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையுடன் *(IWMS)* இணைக்கப்படும். பிரதேச செயலகங்களில் குறை தீர்க்கும் பொறிமுறை தற்போது கைமுறையாக செயற்படுத்தப்பகிறது.

சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் திட்டத்தின் பிரஜைகள் ஈடுபாடு நடவடிக்கைகள் மற்றும் பங்குதாரர் ஆலோசனைகள், புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினால் உதவியளிக்கப்பட்ட மேம்படுத்தப்பட்ட ஒருங்கிணைந்த சமூகப் பாதுகாப்பு முறைமையின் ஒட்டுமொத்த வடிவமைப்பிற்கான உள்ளீடுகளை வழங்கி பயனாளிகள் பதிவேட்டைத் தயாரிப்பதில் பங்களித்தது. மேலும், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களமும் புதிய சமூகப் பாதுகாப்புத் திட்டத்தைத் தயாரிக்கும் போது திட்டத்தால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்களுடன் ஆலோசனைகளை நடத்தியது. நடத்தப்பட்ட ஆலோசனைகளிலிருந்து கண்டடையப்பட்ட விடயங்கள் பகிரங்கமாக வெளியிடப்பட்டுள்ள திட்டத்தின் பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**பங்குதாரர் அடையாளம் மற்றும் பகுப்பாய்வு**

சமூகப் பாதுகாப்புத் திட்டமானது "பாதிக்கப்பட்ட தரப்புகளை" குழுக்கள் அல்லது திட்டத்தால் நேரடியாக பாதிக்கப்படக்கூடிய ஏனைய நிறுவனங்களை அடையாளம் கண்டுள்ளது மற்றும்/அல்லது பண மானியங்கள் மற்றும் வாழ்வாதார உதவி வழங்குவது தொடர்பான திட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடைய மாற்றங்களுக்கு மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட தரப்பினரில் பின்வரும் பாதிக்கப்படக்கூடிய குழுக்கள் அடங்கும்: வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் குடும்பங்கள், வறிய நிலையில் உள்ள பெண்கள் தலைமை தாங்கும் /ஒற்றைத் தலைமை குடும்பங்கள், வறிய நிலையில் உள்ள கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள், அரச முறைமையில் தங்கியிருக்கும் நாட்பட்ட சிறுநீர் நோயாளிகள் /புற்றுநோய்/தொற்றா நோய்களை உடைய நோயாளிகள், பெருந்தோட்ட சமூகங்களில் உள்ள குடும்பங்கள், பின்தங்கிய நகர்ப்புற குடியிருப்புகள், பின்தங்கிய கிராமங்கள், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வறிய குடும்பங்கள், பெருந்தோட்டங்களில் உள்ள முறைசாரா தொழிலாளர்கள், சிறிய அளவிலான பணப்பயிர் விவசாயிகள், பாரம்பரிய மீனவர்கள், ஏற்றுமதி செயன்முறையாக்க வலயத்தில் உள்ள உடலுழைப்பைத் தேவைப்படுத்தும் தொழிலாளர்கள், வறிய குடும்பங்களைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர்கள் - நகர்ப்புற மற்றும் கிராமப்புறம், சாதாரண தொழிலாளர்கள், நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நுண்/சிறு/குறுந்தொழில் உரிமையாளர்கள். திட்ட நடைமுறைப்படுத்தலில் அதிக ஆர்வமுள்ள மற்றும் உயர்ந்த மட்டம் முதல் மிதமான மட்டம் வரையான செல்வாக்கைக் கொண்ட ஏனைய ஆர்வமுள்ள தரப்பினரை சமூகப் பாதுகாப்புத் திட்டத்தினால் அடையாளம் கண்டுள்ளது. அதிக செல்வாக்கு உள்ளவர்களில் நிதி அமைச்சு, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் , உள்நாட்டலுவல்கள்

அமைச்சு, மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் கள அலுவலகங்கள், நலன்புரி நன்மைகள் சபை, சமுர்த்தி திணைக்களம், தேசிய முதியோர் செயலகம், மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய செயலகம் ஆகியவை அடங்கும்.

**தொடர்பாடல் மற்றும் தகவல் வெளிப்பாடு**

பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டம் மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக அர்ப்பணிப்புத் திட்டம் *(ENVIRONMENT AND SOCIAL COMMITMENT PLAN)* போன்ற சுற்றாடல் மற்றும் சமூக சட்டகம் ஆவணங்கள் அரசாங்கம் மற்றும் உலக வங்கியின் அனுமதிக்குப் பின்னர் நிதி அமைச்சு, பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் மற்றும் உலக வங்கியின் வெளி இணையதளத்தில் மதிப்பீட்டு கட்டத்தில் வெளியிடப்பட்டன. நடைமுறைப்படுத்தும் போது, முக்கிய சுற்றாடல் மற்றும் சமூக சட்டகம் ஆவணங்களைத் தவிர, திட்ட காலாண்டு அறிக்கைகள், ஆண்டு அறிக்கைகள் மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக அர்ப்பணிப்புத் திட்டம் மற்றும் பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டத்தின் படி கண்காணிப்பு நடவடிக்கைகள் போன்ற துணைத் திட்டக் குறிப்பான பாதுகாப்புக் கருவிகள் பகிரங்கமாக வெளியிடப்படும். அனைத்து ஆவணங்களின் நிறைவேற்றுச் சுருக்கத்தின் மொழிபெயர்ப்புகள் உள்நாட்டு மொழிகளில் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தப்படும். தகுதி அளவுகோல்கள், விண்ணப்ப நடைமுறைகள், பயனாளிகள் தெரிவு, முன்னேற்ற அறிக்கையிடல், ஆலோசனைகள், குறை தீர்க்கும் பொறிமுறைகள், திறன் விருத்தி மற்றும் விழிப்புணர்வை அதிகரிக்கும் திட்டங்கள் பற்றிய திட்டம் தொடர்பான தகவல்கள் டிஜிட்டல் தளங்கள், நிதி அமைச்சு மற்றும் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் இணையதளங்கள், பாரம்பரிய ஊடகங்கள் (தொலைக்காட்சி, செய்திப்பத்திரிகைகள், வானொலி) மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் ஊடாக வெளியிடப்படும். பங்குதாரர்கள் தங்கள் கருத்து மற்றும் பரிந்துரைகளை எவ்வாறு வழங்கலாம் என்பது குறித்த விரிவான தகவல்களை இந்த ஊடகங்கள் வழங்கும்.

**பங்குதாரர் ஈடுபாட்டிற்கான மூலோபாயம்**

திட்டப் பயனாளிகள்/இலக்குக் குழுக்கள், தெரிவு அளவுகோல்கள், திட்ட வழங்கல்கள், நடைமுறைப்படுத்தல் நடைமுறைகள், பாதிப்புகள் மற்றும் அபாயங்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், குறை தீர்க்கும் பொறிமுறை மற்றும் பயனாளிகளின் திருப்தி குறித்த பார்வைகள் மற்றும் கருத்துக்களைப் பெற குழு கூட்டங்கள், சிறிய செயலமர்வுகள், கவனக் குழு கலந்துரையாடல்கள், திருப்தி தொடர்பான ஆய்வுகள், சமூக ஊடகங்கள் மற்றும் சமூக கண்காணிப்பு போன்ற பல்தரப்பட்ட அணுகுமுறைகளைப் பயன்படுத்தி பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட பங்குதாரர்களுடன் தொடர்ச்சியான ஆலோசனைகள் திட்ட காலம் முழுவதிலும் நடத்தப்படும். ஆலோசிக்கப்பட வேண்டிய பகுதிகள், ஆலோசனை முறைகள், காலங்கள் போன்றவை

உட்பட ஒவ்வொரு வகை பங்குதாரர் குழுவிற்குமான ஈடுபாட்டு மூலோபாயங்களை பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டம் அடையாளம் காண்கிறது.

**பாதிக்கப்படக்கூடிய குழுக்களை ஈடுபடுத்துவதற்கான மூலோபாயம்**

தொடர்புடைய பிரிவுகளின் *(EB, CKDU,* மாற்றுத்திறனாளி*)* சமூக உதவிக் கூறுகளின் பிரதேச மற்றும் மாவட்டச் செயலக அதிகாரிகளுடனான திட்ட முகாமைத்துவக் குழுக்கள் பின்வருவன போன்ற பல பாதிப்புகளால் பாதிக்கப்படும் வறிய குடும்பங்களை உறுதிசெய்யும்: முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ள குடும்பங்கள் மற்றும் நாட்பட்ட சிறுநீரக நோய் /புற்றுநோய்/ தொற்றா நோய்களை உடைய நோயாளிகள் உள்ள குடும்பங்கள், பெருந்தோட்டத் துறை, பின்தங்கிய நகர்ப்புற குடியிருப்புகள் மற்றும் பின்தங்கிய கிராமப்புறங்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வசிப்பவர்கள் மற்றும் வேடுவ சமூகங்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள்/ஒற்றைத் தலைமைத்துவ குடும்பங்கள் ஏனையவர்கள் மத்தியில் அவர்களின் குரல்களுக்கு செவிசாய்க்கப்படும் ஒரு அர்த்தமுள்ள செயன்முறையில் பங்கேற்க முடியும்.

சமூகக் கூட்டங்களுக்கான இடங்களின் நேரம் மற்றும் அமைவிடம் ஆகியவை ஆலோசிக்கப்பட வேண்டிய இலக்குக் குழுக்களைக் கருத்திற் கொண்டு கவனமாகப் பரிசீலிக்கப்படும், மாற்றுத் திறனாளிகள் குறித்த இடங்களை அணுகுவதை உறுதிசெய்து, பெண்களின் குழந்தை பராமரிப்பு அல்லது முதியோர் பராமரிப்புக் கடமைகள் கருத்திற்கொள்ளப்பட்டு, மேலும் அத்தகைய இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து கவனம் செலுத்தப்படும். பழங்குடியினரை வேடுவ சமூகங்களை ஈடுபடுத்த, இந்த சமூகங்களுடன் பணிபுரியும் சமூக மைய அமைப்புகள் /சிவில் சமூக நிறுவனங்கள் மூலம் அணுகல், உள்ளூர் மொழியின் பயன்பாடு கருத்திற் கொள்ளப்படுவதுடன், அவர்களுடனான ஈடுபாட்டின் போது அந்த சமூகங்களின் சமூக மற்றும் கலாசார நெறிமுறைகள் பற்றிய உணர்வு ஆகியவை கவனத்தில் கொள்ளப்படும். மேலும், பழங்குடி மக்கள் கட்டமைப்பு உலக வங்கியின் சுற்றாடல் மற்றும் சமூக சட்டகம் தேவைப்பாடுகளுக்கு ஏற்ப வேடுவ சமூகங்களை ஈடுபடுத்துவதற்கான மூலோபாயங்களை ஆவணப்படுத்தி தயாரிக்கப்படும்.

**குறை தீர்க்கும் பொறிமுறை *(GRM)***

இத்திட்டமானது இரண்டு குறை தீர்க்கும் பொறிமுறைகளை கொண்டிருக்கும் ஒன்று பண மானிய அம்சத்திற்காகவும் மற்றொன்று வாழ்வாதார ஆதரவு அம்சத்திற்காகவும் இருக்கும். சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள குறை தீர்க்கும் பொறிமுறையை வலுப்படுத்துவதை இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. நலன்புரி நன்மைகள் சபையின் அழைப்பு மையம் பின்வரும் வகையில்

இருக்கும்: *(i)* முழுமையாக பணியாளர்களைக் கொண்டதாக; *(ii)* அனைத்து குறைகளும் பதிவு செய்யப்பட்டு வகைப்படுத்தப்பட்டதாக; *(iii)* குறைகள் அவ்வப்போது பகுப்பாய்வு செய்யப்படும்; மற்றும் *(iv)* பிரச்சினைகளை தீர்க்க தீர்வு நடவடிக்கை எடுக்கப்படும். பிரதேச செயலகங்களில், தெரிவுசெயதல், விலக்குதல், இலக்குமையப்படுத்தல் மற்றும் கொடுப்பனவு பொறிமுறை தொடர்பான குறைகளை பதிவு செய்யவும் ஆவணப்படுத்தவும் *MIS*ஐ அணுகலாம். பதில்களுக்கான சேவை தரநியமங்கள் குறை தீர்க்கும் பொறிமுறை கையேட்டில் குறிப்பிடப்படும். வாழ்வாதார உதவிக் கூறுக்கான குறை தீர்க்கும் பொறிமுறை, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவால் முகாமைத்துவம் செய்யப்பட்டு ஒருங்கிணைக்கப்படும். திட்டத்திற்கான சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் திட்ட முகாமைத்துவப் பிரிவுடன் சூழல் மற்றும் சமூக நிபுணர் திட்டத்திற்கான குறை தீர்க்கும் பொறிமுறை மையமாக செயற்படுவார். குறை தீர்க்கும் பொறிமுறையானது பாலின அடிப்படையிலான வன்முறை, பாலியல் முறைகேடு மற்றும் துஷ்பிரயோகம்/பாலியல் துன்புறுத்தல் சம்பவங்களைத் தகுதியான சேவை வழங்குநர்களுக்குத் தேவையான பதிலுக்காகப் பரிந்துரைக்கவும் வடிவமைக்கப்படும்.

**கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்**

சமூகப் பாதுகாப்புத் திட்டத்திற்கான பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டத்தை கண்காணித்தல் மற்றும் மதிப்பிடுவதற்கான பொறுப்பு நிதி அமைச்சின் கீழ் நலன்புரி நன்மைகள் சபை மற்றும் பெண்கள், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் பகிர்ந்து கொள்ளப்படும். நலன்புரி நன்மைகள் சபை மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் ஆகிய இரண்டும் பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டத்தை உருவாக்குவதற்கு முழுமையாக பணியாளர்களைக் கொண்டிருக்கும். திட்டமானது பங்குதாரர் நேர்காணல்கள், குழு கலந்துரையாடல்கள், பின்னூட்ட ஆய்வுகள், தள விஜயங்கள் மற்றும் இரண்டு முகாமைத்துவ குழுக்களின் மற்றும் பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்ட நடைமுறைப்படுத்தல் குழு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுக்கான பல முறைகள் மற்றும் கருவிகளைப் பயன்படுத்தும். காலச் சட்டகங்கள் மற்றும் பயன்படுத்த வேண்டிய முறைகள் உட்பட கண்காணிப்புப் பொறுப்புகள் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. மைய நீரோட்ட பிரஜைகள் ஈடுபாட்டிற்கான உலக வங்கி தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான பயனாளிகளின் கருத்துக் குறிகாட்டிகள் பெறுபேற்றுச் சட்டகத்தில் உள்ளடக்கப்பட்டு பங்குதாரர் ஈடுபாட்டுத் திட்டத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.